# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 91 of 2023

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ரவி |
| தந்தை பெயர் | : | திரு. ராயர் |
| வா.த.சா | : | 2 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 04.08.2025 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 2 அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கு A-அட்டவணை சொத்தில் முதலாவது அயிட்டம் சொத்தை நான் 1999-ம் ஆண்டு நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். நான் யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்பவரது பெயர் எனக்கு தற்போது நியாபகம் இல்லை. A-அட்டவணை சொத்தின் வடபுறம் சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையிலிருந்து A-அட்டவணை சொத்திற்கு செல்ல முடியாது. B-அட்டவணை சொத்து தேசிய நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

2. B-அட்டவனை சொத்தில் பயணிகள் நிழற்குடை இருந்தது என்றால் சரிதான். ஆனால் அதை ஊர் மக்கள்தான் கட்டினார்கள். தற்போது சாலை விரிவாக்கத்தின்போது மேற்படி நிழற்குடை எடுக்கப்பட்டுவிட்டது. சாலை விரிவாக்கம் பணி முடிவடைந்துவிட்டது. B-அட்டவணை சொத்தில் மதில் சுவர் அல்லது கட்டிடம் எதுவும் கட்டப்படவில்லை. B-அட்டவணை சொத்தில் கடலூர் மாநகராட்சி தரப்பில் பயணிகள் நிழற்குடை அமைக்கப்பட உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

3. கடலூர் மாநகராட்சியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தள்ளபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.